# இந்தியாவின் 3வது.......

இடம்பெற்றுள்ளது. இதனால், விமானி சாதுரியமாக செயல்பட்டால்தான் விமானத்தை பத்திரமாக தரை இறக்க முடியும். விபத்துக்குள்ளான விமானத்தின் விமானி குலுசிக், 10,000 மணி நேரத்துக்கும் அதிகமாக விமானத்தை இயக்கிய அனுபவம் பெற்றவர். செர்பிய நாட்டைச் சேர்ந்த அவர் ஏற்கனவே பல முறை மங்களூர் விமான நிலையத்தில் விமானத்தை தரையிறக்கியுள்ளார்.

விமானியுடனான உரையாடல் விமான கட்டுப்பாட்டு அறையில் பதிவாகி இருக்கும். அந்த ஒலிப்பதிவை விசாரணை அதிகாரிகள் ஆய்வு செய்து வருகின்றனர். விபத்து நடந்தபோது விமான கட்டுப்பாட்டு அறையில் பணியில் இருந்த அதிகாரிகளிடம் விசாரித்தனர். விமானத்தை தரையிறக்க உதவும் கருவிகள் ஒழுங்காக இயங்குகிறதா என்று விசாரணை குழுவினர் ஆய்வு செய்து விவரங்களை சேகரித்துள்ளனர். முதல் கட்ட விசாரணை முடிவடைந்துள்ள நிலையில், விமானியின் தவறு காரணமாகவே விபத்து நடந்திருக்கும் என்று தெரியவந்திருப்பதாக சிவில் விமான போக்குவரத்து இயக்குனரக வட்டாரங்கள் தெரிவித்தன. மங்களூர் விமான நிலையத்தில் விமானத்தை தரையிறக்கும் போது, முதலில் வழிகாட்டும் கருவிகளின் உதவியோடு விமானத்தை இயக்கலாம். விமான நிலையத்துக்கு 800 மீற்றர் தூரம் மட்டுமே இருக்கும்போது விமானத்தை தன் முழு கட்டுப்பாட்டில் விமானி கொண்டு வரவேண்டும். ஆனால், விபத்து நடந்தபோது, விமானம் தரை இறங்க தொடங்கிய பிறகே விமானத்தை தன் முழு கட்டுப்பாட்டுக்குள் விமானி குலுசிக் கொண்டு வந்துள்ளதாகக் கூறப்படுகிறது. இதனால்தான் தரை இறங்க வேண்டிய இடத்தை தாண்டி விமானம் தரையிறங்கி உள்ளது. விமானத்தை தவறுதலாக தரை இறக்கிவிட்டோம் என்பதை உணர்ந்த விமானி குலுசிக் திடீரென பிரேக் போட டயர் வெடித்து விமானம் கட்டுப்பாட்டை



இழந்து பள்ளத்தாக்கில் விழுந்திருக்க வாய்ப்பு உள்ளதாக விசாரணை அதிகாரி ஒருவர் கூறினார்.

இதேவேளை, விபத்தில் பலியானவர்களில் 146 பேருடைய உடல்கள் அடையாளம் காணப்பட்டு ஒப்படைக்கப்பட்டுள்ளன. பலியானவர்களில் 50க்கும் மேற்பட்டவர்கள், கேரள மாநிலத்தில் உள்ள காசர்கோடு மற்றும் கண்ணூர் மாவட்டங்களை சேர்ந்தவர்கள். இதேவேளை, விமான விபத்து ஒரு தொழிலதிபருக்கு பேரழிப்பு ஏற்பட்டுள்ளது. சவுதி அரேபியாவில் தொழிலதிபராகவுள்ள சமீர் ஏ.ஷேக் (24) தனது பாட்டி இறந்த செய்திகேட்டு, பாட்டியின் இறுதிச் சடங்கில் கலந்து கொள்ளச் சென்ற அவரது குடும்பத்தினர் 16 பேரை இந்த விபத்தில் பறிகொடுத்துள்ளார். தனது மனைவி, 2 குழந்தைகள், தாய் மாமா மற்றும் உறவினர்கள் 12 பேர் ஆக மொத்தம் 16 பேரை துபாயில் இருந்து புறப்பட்ட இந்த எயார் இந்தியா விமானத்தில் அனுப்பி வைத்த இவர், மும்பை வந்து அங்கிருந்து வேறு ஒரு விமானத்தைப் பிடித்து மங்களூர் செல்ல திட்டமிட்டு இருந்தார். அதன்படி மும்பை வந்து சேர்ந்த அவருக்கு, மங்களூர் செல்வதற்கான இணைப்பு விமானம் கிடைக்க வில்லை. அதனால் வேறு இணைப்பு விமானத்துக்கு காத்திருந்தார். இந்த நிலையில்தான் இவரது பாட்டியின் இறுதிச் சடங்கில் கலந்து கொள்ள சென்ற அவரது குடும்பத்தினர் 16 பேரும் விமான விபத்தில் பலியாகி விட்டனர் என்ற அதிர்ச்சி அவருக்கு கிடைத்தது.



வவுனியா மெனிக் பாம்
தடுப்புச் சிறைமுகாமில் வாழும் தமிழர் ஒருவர்


## தமிழ்ச்சிறார்களின் திறமை நாடி

பிரான்சு தமிழ் மாணவர்களுக்கான பிரெஞ்சு மொழித்தேர்வு.

தரம் 1 இலிருந்து 9வரையான மாணவர்களுக்கு பிரெஞ்சு மொழித்தேர்வு பிரான்சு தமிழ் இளையோர் அமைப்பினரால் நடத்தப்படவிருக்கிறது. இந்தத்தேர்வில் கலந்து கொள்ளவிருக்கும் மாணவர்கள் தங்கள் விபரங்களை பிரான்சு தமிழ் இளையோர் அமைப்பின் இணயத்தளத்தில் அல்லது தங்கள் அருகிலுள்ள தமிழ்ச்சோலைகளினூடகவும் மிக விரைவாக பதிவு செய்யுமாறு கேட்டுக்கொள்ளப்படுகின்றனர்.

தேர்ச்சிபெறுவோருக்கு சான்றிதழ்கள் வழங்கி மதிப்பளிக்கப்படும்.

தேர்வு நடைபெறும் நாள் யூன் 12ம் மற்றும் 13ம் திகதி.

தேர்வு நடைபெறும் இடம். Centre D'examen,
2 Allée Colonel Fabien,
92200 Nanterre.

தொடர்புகளுக்கு–
Tel - 06 21 58 97 65
e-mail - contactàtyo-france.com
web - www.tyo-france.com

